05.06.2025

Elec. O.P.No. 164/2022

**ம.சா.1 – தாமோதரன்**

**<u>2–ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் 9–ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்கிறேன். நான் இதற்கு முன்பு தேர்தலில் போட்டியிட்டதில்லை. இரண்டாம் எதிர்மனுதாரர் ஏற்கனவே தேர்தலில் நின்றுள்ளார். மேட்டுப்பாளையம் டவுன் பஞ்சாயத்திற்குள் வருகிறது என்றால் சரிதான். நான் மேட்டுப்பாளையம் டவுன் பஞ்சாயத்தில் 6–ஆவது வார்டு உறுப்பினர் பதவிக்கும், 2–ஆம் எதிர்மனுதாரர் 11–ஆவது வார்டு உறுப்பினர் பதவிக்கும் நின்றார் என்றால் சரிதான். 11–ஆவது வார்டிற்கு மொத்தம் ஐந்து நபர்கள் போட்டியில் இருந்தார்கள். 11–ஆவது வார்டு வேட்பாளர் பரீசிலனையின்போது 2–ஆவது எதிர்மனுதாரர் வேட்புமனுவை ஆட்சேபித்து யாராவது எழுத்துபூர்வமாக ஆட்சேபனை தெரிவித்தார்களா என்றால், எனக்கு தெரியாது. வேட்புமனு பரீசிலினையின்போது, எவ்வாறு ஒருவருடைய வேட்புமனுவை ஆட்சேபனை செய்யவேண்டும் என்று விதிமுறைகள் தேர்தல் கையேட்டில் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு ஆட்சேபனை தெரிவித்தும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அதன்மீது யாரிடம் மேல்முறையீடு செய்யவேண்டும் என்றும் அந்த கையேட்டில் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 2–ஆம் எதிர்மனுதாரர் வேட்பு மனு தாக்கல் செய்யும்போதோ அல்லது அவருடைய வேட்புமனு பரிசீலனையின்போதோ, நானோ அல்லது வேறு யாரோ அந்த வேட்புமனுவை ஆட்சேபனை செய்து எழுத்துபூர்வமாக கொடுத்துள்ளோமா என்றால், நான் கொடுக்கவில்லை, ராஜேந்திரன் என்பவர் கொடுத்துள்ளார். ராஜேந்திரன் கொடுத்தாக சொல்லப்படும் எழுத்துப்பூர்வமான ஆட்சேபனையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேட்பு மனு பரீசிலனை முடிந்த பிறகு, ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் குறித்து அனைவரிடமும் கையெழுத்து வாங்குவார்கள் என்றால், எனக்கு ஞாபகமில்லை. ராஜேந்திரன் கொடுத்த ஆட்சேபனையை பெற்றுக்கொண்டுதான் 2–ஆம் ../

எதிர்மனுதாரரின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு ராஜேந்திரன் கொடுத்த ஆட்சேபனையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தது குறித்து மேல்முறையீடு எதுவும் செய்தாரா என்றால், மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. வேட்பு மனு பரிசிலனைக்கு வேட்பாளருடன் மற்றும் ஒரு நபரை அனுமதிப்பார்கள் என்றாலும், அவரிடமும் கையெழுத்து வாங்குவார்கள் என்றால், வேட்பாளரை தவிர வேறு யாரையும் அனுமதிக்கமாட்டார்கள். மேற்சொன்ன தேர்தல் 19.02.2022–இல் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை எந்த தேதியில் நடைபெற்றது என்று ஞாபகமில்லை. வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடத்தில் நான் இருந்தேன் என்றால் சரிதான். வாக்கு எண்ணிக்கை முடிந்து வாக்குகள் எண்ணிக்கை பதிவு செய்த படிவத்தில் அனைத்து வேட்பாளர்களிடமும் கையெழுத்து வாங்குவார்கள் என்றால் சரிதான். வாக்கு எண்ணிக்கையின்போதும் 2–ஆம் எதிர்மனுதாரர் தேர்தலை ஆட்சேபித்து மனு எதுவும் வாக்கு எண்ணிக்கை மையத்தில் வைத்து செய்யவில்லை என்றால் சரிதான். 2–ஆம் எதிர்மனுதாரர் பொறுப்பேற்ற பிறகும் இந்த மனு தாக்கல் செய்யும் வரையும் நான் எந்தவொரு ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால், எனக்கு ஞாபகமில்லை. இந்த தேர்தல் மனுவை நான் முறையான உரிய சட்டப்பிரிவின்கீழ் தாக்கல் செய்யவில்லை என்பதால், இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் டவுன் பஞ்சாயத்து சட்டத்தின்கீழ் இந்த தேர்தல் வழக்கை தாக்கல் செய்யாததால் எனக்கு அந்த பரிகாரம் கிடைக்காது என்றால் சரியல்ல. வேட்பு மனு பரிசீலனை செய்த அதிகாரியை ஆட்சேபனையை உரிய முறையில் பரிசீலிக்கவில்லை என்பதால், அவர் கடமை தவறி செயல்பட்டார் என்று மேல் அதிகாரிகளுக்கு புகார் செய்தோமா என்றால் சரிதான். நான் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டேன். 2–ஆம் எதிர்மனுதாரர் திராவிட முன்னேற்ற கழகம் என்ற கட்சியின் சார்பாக போட்டியிட்டார். மொத்தமுள்ள 15 வார்டில் 13 வார்டில் தி.மு.க வெற்றி பெற்றது. நான் அந்த தேர்தலில் இரண்டு வாக்குகள்தான் பெற்றேன் என்றால் சரிதான். 2–ஆம் எதிர்மனுதாரர்தான் அந்த டவுன் பஞ்சாயத்தினுடைய ../

தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சரிதான். ம.சா.ஆ.6–இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்ற எண். 155/2014 என்ற வழக்கிலிருந்து 2–ஆம் எதிர்மனுதாரர் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே விடுவிக்கப்பட்டுவிட்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் குற்ற எண்.90/2018 என்ற வழக்கும் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பிழையான வழக்கு என்று முடித்துவிட்டார்கள் என்றால், அதுபற்றி முழுவிபரமும் எனக்கு தெரியாது. 2020–ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கிலிருந்தும், 2–ஆம் எதிர்மனுதாரர் விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்று சொன்னால், 2024–ஆம் ஆண்டுதான் அவர் விடுதலை செய்யப்பட்டார். நான் தாக்கல் செய்த படிவம்–3A–வை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் 2–ஆம் எதிர்மனுதாரருக்கும் சொத்து சம்பந்தமாக எந்தவொரு பிரச்சனையும் இல்லை.

**(குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.